இனிமையான குழந்தைகளே! விசார் சாகர் மந்தன் செய்து ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் பரமாத்மா சிவனுடைய மகான் வித்தியாசத்தை தெளிவுபடுத்துங்கள்.

கேள்வி: பிரம்மா பாபா தனக்குத் தானே என்ன பேசிக்கொள்கின்றார்? அவருக்கு எது அதிசயமாக உள்ளது?

பதில்: பிரம்மா பாபா தனக்குத் தானே பேசிக்கொள்கின்றார் - சிவபாபா நினைவு அடிக்கடி மறந்துவிடு கிறது, எனக்கு என்ன ஆகிறது என்று தெரியவில்லை! தந்தை எப்பொழுது பிரவேசம் செய்கின்றாரோ அப்பொழுது நினைவு இருக்கின்றது, பாபா சென்றவுடன் நினைவு மறந்துவிடுகிறது என்பது இல்லை தானே. ஆனால், நானோ அவருடைய குழந்தை ஆவேன், நினைவு ஏன் மறந்துபோகிறது? என்னுடைய நினைவினால் தான் பாபா வருகின்றாரா என்ன? இவ்வாறெல்லாம் பாபா தனக்குத் தானே பேசி ஆச்சர்யப்பட்டுக் கொள்கிறார்.

பாடல்: நீங்கள் அன்புக் கடலானவர்...

ஓம்சாந்தி. சிவபாபா வந்திறங்கி, தன்னுடைய தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தை களுக்கு கீதையின் பகவான் யார்? என்று புரிய வைக்கின்றார். ஏனெனில், இந்த சமயம் பாரதத்தில் அஞ்ஞான இருள் உள்ளது. இதை காரிருள், அஞ்ஞான இருள் என்று கூறப்படுகின்றது. பிறகு, ஞானத்தின் வெளிச்சம் வேண்டும். பரமபிதா பரமாத்மாவைத் தான் மனிதர்கள் ஞானக்கடல், நாலெட்ஜ்ஃபுல் என்று ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். நல்லது, அவர் ஞானக்கடலாக இருக்கின்றார், அவரிடமிருந்து என்ன கிடைக்கின்றது? நதிகளிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது எனில், அதில் நன்றாக ஸ்நானம் செய்கின்றனர். உங்களுக்கு ஞானக்கடலிடமிருந்து என்ன கிடைக்கின்றது? ஒரு துளி. நான் ஞானக்கடலாக இருக்கின்றேன், உங்களுக்கு ஒரு துளி கொடுக்கின்றேன் என்று தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரியவைக்கின்றார். என்ன துளி? நான் உங்களுடைய தந்தை ஆவேன். நீங்கள் என்னை நினைவு செய்யுங்கள் என்று மட்டும் கூறுகின்றேன். நாம் நம்முடைய சாந்திதாமம், சுகதாமத்திற்குச் செல்கின்றோம் என்று புரிந்துகொள்ளுங்கள்.

ஞானக்கடல் ஒரு நொடியில் ஜீவன்முக்தி வைகுண்டத்திற்கு அனுப்பி வைக்கின்றார். வீட்டில் அமர்ந்தபடியே திவ்ய திருஷ்டி கொடுக்கின்றார், மனிதர்களோ ஒருவருக்கொருவர் எதிரிலிருந்து திருஷ்டி கொடுக்கின்றனர். பாபா வீட்டில் அமர்ந்தபடியே சாட்சாத்காரம் (காட்சி) செய்விக்கின்றார். ஒரு துளி கிடைப்பதன் மூலம் நீங்கள் இங்கிருந்து சென்றுவிடுகிறீர்கள். இங்கே அமர்ந்தபடியே நீங்கள் வைகுண்டத்திற்குச் சென்றுவிடுகிறீர்கள். இப்பொழுது தந்தை வந்து புரியவைக்கின்றார். கீதையின் பகவான் யார்? அவர் ஞானக்கடல் நிராகாரமானவர் ஆவார். மனிதர்களோ ஸ்ரீகிருஷ்ணரை நினைத்துப் பாடுகிறார்கள். ஸ்ரீகிருஷ்ணர் ஞானம் சொல்லவில்லை என்று இப்பொழுது நீங்கள் புரியவைக்க வேண்டும். முதன்முதலில், கிருஷ்ணர் தாயின் கர்ப்பத்தின் மூலம் பிறப்பெடுத்தார், கம்சபுரி இருந்தது, பிறகு, ஹே கம்சனே! உன்னை அழிக்கக்கூடியவர் வந்துவிட்டார் என்ற அசரீரி ஒலி கேட்டது என்று கூறுகின்றனர். அனைவரும் அசுரர்களாக இருக்கின்றனர் என்பதை நீங்கள்

அறிவீர்கள். கம்சன், ஜராசந்தன், அகாசுரன், பகாசுரன், பாவ ஆத்மாக்கள் ஆகிய அனைவரையும் அழிப்பதற்காக அவரது பிறப்பு ஏற்பட்டதாகக் காண்பிக்கின்றனர். எனவே, ஸ்ரீ கிருஷ்ணர் பிறப்பெடுத்திருக்கின்றார். அவரோ சிறிய குழந்தையாக இருந்தார். பிறகு, ஞானம் எப்பொழுது கொடுத்தார்? அவர்கள் யுத்த மைதானத்தில் கிருஷ்ணரை பெரிய உருவமாகக் காண்பிக்கின்றனர், சிறிய குழந்தையாகக் காண்பிப் பதில்லை. கிருஷ்ண ஜெயந்திக்குப் பின்னர் கீதா ஜெயந்தியைக் காண்பிக்கின்றனர். சிறிது காலத் திற்குப் பிறகு எப்பொழுது அவர் பெரியவரானாரோ, அப்பொழுது ஞானம் கொடுத்திருப்பார். பிறப்பெடுத்திருக்கின்றார் என்றும் காண்பிக்கின்றனர். நேரமும் கூட, இரவு நேரத்தில் பிறந்ததாகக் காண்பிக்கின்றனர். இங்கே நீங்கள் சிவபாபா எழுந்தருளி இருப்பதைப் பார்க்கிறீர்கள். எப்பொழுது பிரவேசம் ஆனார் என்பது எவருக்கும் தெரியாது. சிவபாபா குழந்தை ஆகவில்லை. அவரோ வயோதிக வானப்பிரஸ்த நிலையில் வந்திருக்கின்றார். எப்பொழுது வந்தார்? என்பதன் தேதியும் கிடையாது. கிருஷ்ணருடைய நாள், தேதி உள்ளது மற்றும் அவர் கர்ப்பத்தின் மூலம் பிறப்பெடுத்திருக்கின்றார். இங்கே சிவபாபாவோ ஞானக்கடலாக இருக்கின்றார். அவர் சிறிய குழந்தையாக ஆகவேண்டிய தில்லை, பிறகு, அவர் வளர்ந்து பெரியவராகி ஞானம் சொல்கின்றார் என்பதும் இல்லை. கிருஷ்ணரோ மனிதர் ஆவார். மனிதர்களை ஞானக்கடல் என்று கூறப்படுவதில்லை. அவருடைய பிறப்போ சொர்க்கத்தில் ஏற்படுகிறது. அவர் எவருக்கும் இராஜயோகத்தைக் கற்பிக்க முடியாது, ஏனெனில், அவரே இராஜா ஆவார். நிராகாரமான தந்தை தான் வந்து இராஜயோகத்தைக் கற்பிக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். பதீத ஆத்மாக்களைப் பாவனமாக, இராஜாக்களுடைய இராஜாவாக ஆக்குகின்றார்.

அந்த எல்லைக்குட்பட்ட இரவு, பகல் மற்றும் இந்த எல்லையற்ற இரவு, பகலினுடைய அர்த்தத்தில் கூட வேறுபாடு உள்ளது. இது சங்கமயுகம் ஆகும். இந்த சங்கமயுகத்தில் பிரம்மாவின் இரவு முடிவடைந்து பிரம்மாவின் பகல் ஆரம்பம் ஆகிறது. இது எல்லையற்ற இரவு, அஞ்ஞான இருள் ஆகும். சத்யுகம் வெளிச்சம் ஆகும். அந்த இரவு சம்மந்தப்பட்ட விசயம் அல்ல. அவர்களோ கிருஷ்ணருடைய பிறப்பை இரவில் கொண்டாடுகின்றனர். அது எல்லைக்குட்பட்ட விசயமாகும், இது எல்லையற்றதாகும். நான் வருகின்றேன், என்னுடைய நாள், தேதி எதுவும் கிடையாது என்று தந்தை கூறுகின்றார். கிருஷ்ணர், இராமர் போன்றோருக்கு நாள், தேதி உள்ளது. முக்கியமானவர்கள் இருவர் மட்டுமே.

இப்பொழுது கிருஷ்ண ஜெயந்தி வருகிறது அல்லவா? கிருஷ்ணரோ சிறிய குழந்தை என்பதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும். பிரம்மாவின் இரவு மற்றும் பகல் என்று மகிமை பாடப் படுகிறது. பிரம்மாவின் பகல் கிருஷ்ணர் ஆவார் மற்றும் பிரம்மாவின் இரவு பிரம்மா ஆவார். பிரம்மா தான் பிறகு கிருஷ்ணர் ஆகின்றார். கிருஷ்ணரின் இரவு அல்லது கிருஷ்ணரின் பகல் என்று கூறுவதில்லை. கிருஷ்ணர் பகவான் ஆவார். அவர் எங்கும் இருக்கின்றார் என்று அவர்கள் நினைக் கின்றனர். எனவே, இதைப் பற்றியும் கூட புரியவைக்க வேண்டும். உங்களுடையது சிவஜெயந்தி ஆகும், அல்லது சிவராத்திரி என்றும் கூறலாம். ஆனால், சிவஜெயந்தி என்று கூறுவதே சரியான தாகும். இதுவும் புரிய வைக்கப்படுகிறது. அவர் கர்ப்பத்தில் வருவதில்லை. சாதாரண உடலில்

வருகின்றார். கிருஷ்ணருடைய வம்சமோ எட்டு தலைமுறைக்கு வருகிறது. சிறிய குழந்தைப் பருவத்தில் அவரை மோகன் மற்றும் கிருஷ்ணர் என்று கூறுகின்றனர். எவ்வாறு வேல்ஸ் நகரத்தின் இளவரசன் இருக்கின்றாரோ, அவ்வாறே இந்திரப்பிரஸ்தத்தின் முதன்முதல் சிம்மாசனத்தில் அமர்பவர் - இந்திரப்பிரஸ்தத்தின் இளவரசர் ஆவார். பிறகு, அவர் இளவரசரிலிருந்து இராஜா ஆகிவிடுவார். கிருஷ்ணர் என்ற வார்த்தை இருக்காது, மகாராஜா என்ற பெயரால் மகிமை செய்யப் படுகின்றார். ஸ்ரீ இலட்சுமி நாராயணரை மகாராஜா, மகாராணி என்று கூறுகிறார்கள். கிங் என்பது ஆங்கில வார்த்தை ஆகும், உண்மையான பெயர் மகாராஜா, மகாராணி என்பதாகும். நாராயணர் ஞானம் கொடுத்தார் என்பது கிடையாது. சுயம்வரத்திற்குப் பிறகு கிருஷ்ணர் ஸ்ரீ நாராயணர் ஆகின்றார். இப்பொழுது இந்த ஞானக்கடல் சிவனுடைய பெயரோ மாறுவதில்லை. ஒரே ஒரு பெயர் தான் உள்ளது. அவருடைய அந்த ரதமோ பெரியது. வந்தவுடனேயே ஞானம் சொல்ல ஆரம்பித்து விட்டார். இவர் (பிரம்மா) ஒன்றும் அறியாமல் இருந்தார். இவருக்குள் பாபா வந்திருக்கின்றார், அவர் காட்சி காண்பிக் கின்றார், ஞானம் கொடுத்துக்கொண்டு இருக்கின்றார் என்பது புரிய வந்தது. இந்த சாட்சாத்காரத்தின் இரகசியம் அதாவது இந்த ஞானம் ஆரம்பத்தில் புரியவில்லை. ஆரம்பத்தில் பனாரஸ் சென்றிருந்தபோது சுவர்களில் சக்கரம் போன்ற சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தேன். இது என்ன? என்பது எதுவுமே புரியவில்லை என்று பாபா தனது அனுபவத்தைக் கூறுகின்றார். ஏனெனில், இவர் குழந்தை (பேபி) ஆகிவிட்டார். புதிய பிறவி எடுத்துவிட்டார் அல்லவா! பாபா நான் 8, 10 மாதங்களாக உங்களுடைய குழந்தையாக இருக்கின்றேன் என்று கூறுகின்றனர் அல்லவா? அதைப்போல் நானும் கூட குழந்தை ஆகிவிட்டேன். எனவே, முதலில் எதுவும் புரியவில்லை. இந்த ஞானத்தின் விசயங்களே புதிதாக இருந்தது. அர்த்தம் இல்லாமல் என்னென்னவெல்லாமோ உருவாக்கிக் கொண்டிருந்தேன். இப்பொழுதோ படித்து படித்து எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன! இப்பொழுது தந்தையின் விசயங்கள் புரிகின்றது. குழந்தைகள் கிருஷ்ண ஜெயந்தியைப் பற்றி புரியவைக்க வேண்டும். சித்திரங்கள் சரியாக உள்ளன. மரத்தில் பிரம்மாவின் சித்திரமும் உள்ளது. வெண்ணையை இவர் விழுங்கிவிடுகின்றார். விஷ்வத்தின் எஜமானர் பதவி வெண்ணெய் ஆகும். கிருஷ்ணர் சத்யுகத்தின் பிராப்தியை எடுத்துக்கொண்டு வந்திருக்கின்றார். ஸ்ரீ கிருஷ்ணர் சத்யுகத்தின் முதல் இளவரசர் ஆவார், பிறகு, அவருடைய குழந்தைகளும் கூட இளவரசர்கள் ஆவார்கள். இது அவருடைய பிராப்தி ஆகும், இந்த பிராப்தி கலியுகத்தில் கிடையாது. எனவே, இந்த சூரியவம்ச பிராப்தியை யார் உருவாக்கியது? ஞான சூரியன் உதயமானார், அஞ்ஞான இருள் அழிந்தது என்று பாடப்படுகின்றது. ஞானக் கடலோ சிவபாபா ஆவார். அவர் வந்திருக்கின்றார், சொர்க்கத்தை ஸ்தாபனை செய்துகொண்டு இருக்கின்றார். வித்தியாசத்தைச் சொல்ல வேண்டும். கிருஷ்ணர் எவ்வாறு கீதை சொல்ல முடியும். அவரோ குழந்தை ஆவார். கர்ப்பத்தில் வந்திருக்கின்றார். அங்கு கம்சன், ஜராசந்தன் போன்றோர் இருந்ததாகக் காண்பிக்கின்றனர். ஆனால், அங்கே அசுரர்கள் இருக்க முடியாது. அசுரர்கள் மற்றும் தேவதைகளுடைய யுத்தம் நடந்ததாகக் காண்பிக்கின்றனர். எனில், அவசியம் கலியுகத்தின் இறுதியில் அசுரர்கள் இருந்திருப்பார்கள், தேவதைகளோ சத்யுகத்தின் ஆரம்பத்தில் இருந்திருப்பார்கள். இவர்களுடைய யுத்தமோ நடைபெறவே இல்லை. மகாபாரத யுத்தம் சரியானதே! தேவதைகளோ இங்கே இருக்க முடியாது. அசுரர்கள் அசுரர்களுடன் யுத்தம் செய்

கின்றனர். இஸ்லாமியர்களுடைய இராஜ்யத்தையும் பார்க்கிறீர்கள். யாதவர்கள், கௌரவர்கள், பாண்டவர்களும் உள்ளனர்.

பாண்டவர்கள் அஹிம்சாவாதிகள், யோகபலம் கொண்டவர்கள். இங்கேயோ இரத்த நதிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. பகைமை உள்ளதல்லவா! பிரிவினையின் போது (இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை) இரத்த நதி நன்றாக ஓடியதல்லவா! சகோதரன் சகோதரனுடனான யுத்தம் நடந்தது, அனைவரும் சகோதர சகோதரர்கள் ஆவார்கள் அல்லவா! அவர்களுடைய யுத்தம் நடைபெறுகிறது, இல்லையெனில், இரத்த நதி எவ்வாறு ஓடும்? இங்கேயோ ஒருவரை ஒருவர் கொன்றுவிடுகின்றனர். வாளால் சண்டையிடுகின்றனர், ஆகையினால், இரத்த நதி ஓடுகிறது. மேலும், இது சங்கமயுக சமய மாகும். இரத்த நதிகளுக்குப் பிறகு நெய்யாறு ஓடும். கிருஷ்ணரோ சிறிய இளவரசர் ஆவார். பிறகு, அவரையும் நிந்தனை செய்துவிட்டனர். அவரை ஞானக்கடல் என்று கூறமுடியாது. சர்வகுண சம்பன்னம், மரியாதை புருஷோத்தமர்கள் என்று தேவதைகளின் மகிமை பாடப்படுகிறது. இந்த மகிமை குழந்தைகளுக்குப் பாடமுடியாது. எப்பொழுதும் இராஜா இராணிக்கே மகிமை பாடப்படுகிறது. அவர்களோ இலட்சுமி நாராயணரை சத்யுகத்திலும் மற்றும் கிருஷ்ணரை துவாபரயுகத்திலும் கொண்டு வந்துவிட்டனர். எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டனர்! இலட்சுமி நாராயணருடைய குழந்தைப் பருவத்தின் கதையை எவராலும் சொல்ல முடியாது. இராமர் சீதையினுடைய கதை (குழந்தைப் பருவ கதை) ஏதாவது சொல்கின்றனர். கிருஷ்ணரைப் பற்றி தப்பும் தவறுமான விசயங்களைச் சொல்கின்றனர். கொஞ்சமாவது சரியான கதையைச் சொல்லுங்களேன்! இலட்சுமி நாராயணருக்கு சர்வகுண சம்பன்ன, மரியாதா புருஷோத்தம், அஹிம்சா பரமோதர்மம்... என்று மகிமை பாடப்படுகிறது. நல்லது, அவர்களுக்கு இராஜ்யத்தை யார் கொடுத்தது? மனிதருடைய பெயரைக் கேட்டு குழம்பிவிடுகின்றனர். இலட்சுமி நாராயணர் என்று கூறுவதால் நீங்கள் சத்யுகத் திற்குச் சென்றுவிடுகிறீர்கள். இது நரனிலிருந்து நாராயணர் ஆவதற்கான கதை ஆகும். கிருஷ்ணர் கதை என்று சொல்வதில்லை, இதை சத்திய நாராயணருடைய கதை என்று கூறுவார்கள். சத்திய கிருஷ்ணருடைய கதை என்று கூறப்படுவதில்லை. சத்தியமான பாபா, ஞானக் கடல் இந்தக் கதையைக் கூறுகின்றார். முழு சிருஷ்டியினுடைய முதல், இடை மற்றும் கடை நிலை பற்றிய கதை ஆகும். இதில் ஸ்ரீ இலட்சுமி நாராயணருடைய கதையும் வந்துவிடுகிறது. அவர்களுடைய 84 பிறவிகளின் கதையைக் காண்பிக்கிறார்கள். ஸ்ரீ நாராயணருடைய கதை மூலம் படகு கரை சேர்ந்துவிட்டது. தந்தை வந்து குழந்தைகளுக்கு நரனிலிருந்து நாராயணர் ஆவதற்கான உண்மையான கதை சொல்கின்றார். ஸ்ரீ நாராயணரோ பெரியவர் அல்லவா! சுயம்வரத்திற்கு முன்னர் யாராக இருந்தார்? இலட்சுமி நாராயணர் என்ற பெயர் இருந்ததா அல்லது வேறு ஏதாவது பெயர் இருந்ததா? இராதை, கிருஷ்ணருடைய சுயம்வரத்திற்குப் பிறகு இலட்சுமி-நாராயணர் என்ற பெயர் வைக்கப் பட்டுள்ளது. பாபா கட்டுரை கொடுக்கின்றார், பிறகு, நீங்கள் விசார் சாகர் மந்தன் செய்ய வேண்டும். இதுவே முதல் தவறு ஆகும். இப்பொழுது கலியுகம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். யாதவர்கள், கௌரவர்கள், பாண்டவர்களும் உள்ளனர். கலியுகம் நடந்து கொண்டிருக்கிறது. கலியுகத்திற்குப் பிறகு அவசியம் சத்யுகம் வரும். நான் இராவணனுடைய பிடியிலிருந்து விடுவித்து, வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்வதற்காக வழிகாட்டியாகி வந்திருக்கின்றேன்.

ஆத்மாக்களையே அழைத்துச் செல்வேன் என்று தந்தை கூறுகின்றார்.

ஆத்மா, பரமாத்மா நீண்ட காலமாக பிரிந்திருந்தனர் என்று மகிமை செய்யப்படுகிறது. கிருஷ்ணர் நீண்ட காலமாக பிரிந்திருந்தார் என்று கூறப்படுவதில்லை.. எப்பொழுது அந்த சத்குரு தரகராக கிடைத்தாரோ, அப்பொழுது அழகான சந்திப்பை ஏற்படுத்திவிட்டார் என்று அந்த நிராகார மானவருக்கே மகிமை உள்ளது. இங்கேயோ அனைவருமே குரு தான். சத்குரு தரகராகக் கிடைத்திருக்கின்றார் என்று பாடப்பட்டுள்ளது. சத்தியமான பரமபிதா பரமாத்மா தரகர் ரூபத்தில் கிடைத்திருக்கின்றார். தரகர் மூலமே வாணிபம் நடக்கிறது. இதுவும் நிச்சயதார்த்தம் ஆகும். ஆத்மா மற்றும் பரமாத்மா தனித்தனியாக உள்ளனர். பரமாத்மா நிராகாரமானவர், அவர் வந்து இவருக்குள் பிரவேசம் செய்து உங்களுடைய நிச்சயதார்த்தம் செய்கின்றார். சுயம் அவரே தரகர் ஆகின்றார். பரமபிதா பரமாத்மாவாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றார். என் ஒருவரை நினைவு செய்யுங்கள் என்று இந்த சரீரத்தில் அமர்ந்துகொண்டு கூறுகின்றார். நான் உங்களை மாயை இராவணனிடமிருந்து விடுதலை செய்து என்னுடன் அழைத்துச் செல்வேன், பிறகு, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு நான் நிர்வாணதாமத்தில் அமர்ந்துவிடுவேன் என்று தந்தை கூறுகின்றார். கிருஷ்ணர் இவ்வாறு கூறமாட்டார். இவர்கள் ஆத்மா மற்றும் பரமாத்மா ஆவார்கள். கிருஷ்ணரோ சிறிய குழந்தை ஆவார். புரிய வைப்பதற்கான விசயங்கள் நிறைய உள்ளன. எனவே, எவ்வாறு இவருக்குள் பிரவேசம் ஏற்பட்டது? என்பதை பாபா புரிய வைத்திருக்கின்றார். பிறகு, நான் இராஜாக்களின் இராஜா ஆகின்றேன் என்று புரிந்துகொண்டார். விஷ்ணுவினுடைய காட்சி கிடைத்தது மற்றும் உள்ளத்தில் மிகுந்த குஷி ஏற்பட்டது. பிறகு, விநாசத்தின் காட்சியும் கிடைத்தது. ஆனால், அந்தளவிற்குப் புரியவில்லை. நீங்கள் நரனிலிருந்து நாராயணர் ஆகப்போகிறீர்கள் என்ற இந்த காட்சியை பாபா காண்பித்தார் என்பதை இப்பொழுது புரிந்துகொண்டார். ஆனால், அந்த சமயத்தில் அவ்வளவாகப் புரியவில்லை. எவ்வாறு பாபா இரவு சொல்லிக்கொண்டு இருந்தார் - சிவபாபாவை நினைப்பதை மறந்துவிடுகிறேன், என்னவாயிற்று என்று தெரியவில்லை. தந்தை எப்பொழுது பிரவேசம் செய்கின்றாரோ அப்பொழுது பாபா வந்திருக்கின்றார் என்பதைப் புரிந்திருக்கின்றேன், நினைவு இருக்கிறது, பிறகு, பாபா சென்றவுடன் மறந்துவிடுகின்றேன் - இவ்வாறு இல்லை தானே! கருத்தை சொல்லும்பொழுது எல்லையற்ற தந்தை வந்து சொல்கின்றார் என்ற உணர்வு ஏற்படு கின்றது. ஆனால், நான் சுயம் மறந்துவிடுகின்றேன். என்னுடைய நினைவினால் தான் வருகின்றாரா என்ன? நான் அடிக்கடி நினைவு செய்கின்றேன் என்று சொல்ல வேண்டும். இவருக்குள் வந்தால் அனை வருக்கும் நன்மை ஏற்படுகிறது. முக்கியமானதே நினைவு ஆகும். வருகின்றாரோ, வரவில்லையோ, தந்தையை அவசியம் நினைவு செய்ய வேண்டும். கீதை ஜெயந்திக்குப் பிறகு கிருஷ்ண ஜெயந்தி வருகிறது என்று பாபா புரியவைத்திருக்கின்றார். முதலில் சிவஜெயந்தி, பிறகு கீதா ஜெயந்தி, பிறகு கிருஷ்ண ஜெயந்தி. சிவன் பெரியவர் ஆவார். திடீரென்று வந்தார் மற்றும் கீதை சொன்னார். அவர் சிறியவர் கிடையாது. இந்த விசயங்களைப் பற்றி எவ்வாறு நாம் புரியவைப்பது என்று விசார் சாகர் மந்தன் செய்ய வேண்டும்.

சிவன் என்று யாரை அழைக்கின்றனர், யாருக்கு சிவராத்திரி

கொண்டாடப்படுகிறது என்பதை சிந்தனை செய்யுங்கள். சத்யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணருடைய இராஜ்யம் நடக்கிறது. நரனிலிருந்து நாராயணர் ஆவதற்கான ஞானத்தை அவசியம் தந்தை தான் கொடுப்பார், அவர் ஞானக் கடல் ஆவார். வேறு எவரையும் ஞானம் நிறைந்தவர் என்று கூறப்படுவதில்லை. கடவுளே ஞானக் கடல், படைப் பாளர், விதை ரூபம் ஆவார். அவரே நாடகத்தின் ஞானத்தைக் கூறுவார். நாடகம் எப்பொழுது ஆரம்பம் ஆகிறது, பிறகு, எப்பொழுது முடிவடைகிறது என்பது எவருக்கும் தெரியாது. சத்யுகத்திலிருந்து கலியுக இறுதி வரை உலகத்தின் வரலாறு, பூகோளம் எவ்வாறு மீண்டும் நடக்கிறது என்பதை வேறு எவரும் புரியவைக்க முடியாது. யார் திரிகாலதரிசியோ, அவரே சொல்ல முடியும். ஒருவரைத் தவிர வேறு எவரும் திரிகாலதரிசி கிடையாது. அவரே உங்களை திரிகாலதரிசி ஆக்குகின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் மற்றும் மூன்று காலங்களையும் உணர்ந்தவர் ஆகி ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் சிவபரமாத்மாவின் மிகப் பெரிய வித்தியாசத்தை தெளிவுப்படுத்தி காரிருளிருந்து விடுவிக்கும் சேவை செய்ய வேண்டும்

2. பாபா என்ன நிபந்தனை தந்திருக்கின்றாரோ அதனை விசார்கார் மந்தன் (ஞான பூர்வமாக தெளிவாக புரிந்துக் கொள்வது) செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு எப்படி புரிய வைக்க வேண்டும் என சிந்தனை செய்ய வேண்டும்.

வரதானம்: புத்தியின் பிரமிக்க வைக்கும் திறன் மூலம் ஆகாரத்தில் (சூட்சமம்) சாகாரத்தின் அனுபவம் செய்யக்கூடிய திலாராமின் (மனதிற்கு ஒய்வு கொடுக்கும் இராம்) தில்ருபா ஆகுக.

பல குழந்தைகள் பின்னால் வந்திருந்தாலும் கூட சூட்சம ரூபத்தின் மூலம் கூட சாகார (ஸ்தூல) அனுபவம் செய்வார்கள். அப்படிப்பட்ட அனுபவத்தின் மூலம் எங்களுக்கு சாகார பாலணை (வளர்ப்பு) கிடைத்தது என்று சொல்வார்கள். மேலும் இப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே சூட்சமத்திலும் கூட சாகாரத்தின் அனுபவம் செய்வது, இது புத்தியின் ஆழ்ந்த ஈடுபாட்டின், அன்பின் வெளிப்படையான சொரூபமாகும். இதுவும் கூட புத்தியின் அதிசயமான நிரூபணமாகும். அப்படிப்பட்ட குழந்தைகள் தான் திலாராம் பாபாவின் நெருக்கமான மனதிற்கு ஒய்வு அளிக்கும் தில்ரூபா ஆவார்கள். இவர்களுடைய மனதில் சதா ஆஹா பாபா - ஆஹா ஆஹா என்ற பாடலை பாடிக்கொண்டே இருப்பார்கள்.

சுலோகன்: தியாகம் நிறைந்த ஆத்மாவின் ஒவ்வொரு செயல் மற்றும் அடியிலும் வெற்றி அடங்கியிருக்கும்.